# வேலூர் மாவட்டம்
# ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
# கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
**ந.க. எண்.1187/SMC/மாஒ6/ஒபக/2023, நாள்: 31.07.2023.**

**பொருள்** : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் 2023 ஆகஸ்ட் மாத பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் 04.08.2023 வெள்ளிக்கிழமை அன்று நடத்துதல் – வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை** : சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1680/A11/பமேகு/ ஒபக/2023, நாள்:27.07.2023.

***********

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டமானது மாதந்தோறும் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகிறது. 2023 ஜூலை மாத பள்ளி மேலாண்மைக் குழு சிறப்புக் கூட்டமானது அனைத்து அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கடந்த 14.07.2023 அன்றும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 19.07.2023 அன்றும் சிறப்பாக நடத்திய பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர்கள், பள்ளித் தலைமையாசரியர்கள், ஆசிரியர் பிரதிநிதிகள் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து, 2023 ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள மாதாந்திரப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து வகை **அரசுப் பள்ளிகளிலும் வரும் 04.08.2023 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 03:00 மணி முதல் 04:30 மணி வரை** நடத்திட அறிவுறுத்தப்படுகிறது.

**அ) கூட்டத்தில் விவாதிக்க வேண்டியக் கூட்டப்பொருள் நிரல்கள்**

1. பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பள்ளி வளர்ச்சி சார்ந்து விவாதிக்க விரும்பும் கூட்டப்பொருள் மீது கலந்துரையாடி தேவையின் அடிப்படையில் உரிய தீர்மானங்களை நிறைவேற்றுவதை தலைமையாசிரியர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

2. அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 14.07.2023 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், குறைந்தபட்சம் 25 முன்னாள் மாணவர்களை பள்ளியுடன் இணைந்து செயல்படும் வகையில், ஜூலை 20ஆம் தேதிக்குள் கண்டறிந்து **www.tnschools.gov.in** இணையதள பக்கத்தில் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் தற்போதைய நிலை மற்றும் விவரங்கள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் பற்றி கூட்டத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

3. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 19.07.2023 அன்று நடைபெற்ற பள்ளி மேலாண்மைக் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் 10_ஆம் வகுப்பு மற்றும் 12_ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத, தேர்விற்கு வருகை புரியாத மற்றும் துணைத் தேர்விற்கு விண்ணபிக்காத சார்ந்த பள்ளியின் எத்தனை மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. மேற்காண் கூட்டத்தில் பங்கேற்றுத் தமது விருப்பத்தைப் பதிவு செய்த எத்தனை மாணவர்கள் உயர்கல்வி (ITI & Polytechnic Colleges) கல்வி நிலையங்களில் சேர்ந்து கல்வியை தொடர்கின்றனர் மற்றும் அதன் தொடர் முயற்சிகள் பற்றிய விவரத்தையும் கூட்டத்தில் தலைமையாசியர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

4. மாவட்ட அளவில் அனைத்து வகையிலும் சிறப்பாகச் செயல்படும் பள்ளி மேலாண்மைக் குழுவிற்கு **2023** ஆகஸ்ட் **15,** சுதந்திர தினத்தன்று சார்ந்த மாவட்ட ஆட்சியர்களால் பாராட்டுச் சான்று வழங்கப்படவிருக்கிறது. இதன்பொருட்டு சிறந்த பள்ளி மேலாண்மைக் குழுவினை EMIS வழியாகத் தேர்வு செய்வதற்கான அடிப்படைகள் (Criteria) இணைப்பு-1_இல் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் விவரத்தை அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் தவறாது பகிர்ந்துகொள்ள வேண்டும்.

**பிற வழிகாட்டுதல்கள்**

1) பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட அழைப்பினை, அஞ்சல் அட்டை_மூலமாகவோ அல்லது கூட்ட அழைப்பாளர் (தலைமை ஆசிரியர்) கையொப்பமிட்ட அழைப்பினைப் பள்ளியில் படிக்கும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் குழந்தைகள் வழியாக மாவட்டத் திட்ட இயக்குநரின் செயல்முறைக் கடிதத்துடன் கொடுத்தனுப்பி வருகையை உறுதிசெய்ய வேண்டும்.

2) பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட நிகழ்வு அட்டவணை இணைப்பு-2_இல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையை நிரந்தரமாகப் பள்ளி வளாகத்தில் பார்வைக்கு வைக்கப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும். கூட்டத்தில் கட்டாயமாக விவாதிக்கப்பட வேண்டிய நிலையானக் கூட்டப்பொருள் நிரல் இணைப்பு-3_இல் காணொலி வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

3) மாவட்டக் கள அலுவலர்கள், பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றிப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றிக் கூட்டப் பொருள் நிரல்களானது (Meeting Agendas) பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் உரிய நேரத்தில் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடைபெறுவதை மாவட்டக் கல்வி அலுவலர்கள் – இடைநிலை / தொடக்கக்கல்வி), உதவி திட்ட அலுவலர், பள்ளி மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு:

1. சிறந்த ப.மே.கு - அடிப்படைகள் (Criteria) மற்றும் மதிப்பீடு (Weightage).
2. மாதாந்திரக் கூட்ட நிகழ்வு அட்டவணை.
3. நிலையான கூட்டப்பொருள் நிரல் – QR Code.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

பெறுநர்:

1. அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொறுப்பு), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வள மைய ஆசிரிய பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.
4. பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

1. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை & தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.